# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண்:** 172/மா/2024

**நாள்: 24.11.2025**

B. இரமேஷ்
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 14
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை, உயர்நீதிமன்ற வளாகம், புதிய கூடுதல் சட்ட அறை, எண் 222 என்கிற முகவரியில் அலுவலகம் வைத்திருக்கும் மற்றும் சென்னை, உள்ளகரம், ராஜேஸ்வரி நகர் பிரதான சாலை, பிளாட் எண் 32 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. ரமேஷ் என்பவர் 04.09.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.09.2024 அன்று பெறப்பட்டு 172/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை, உயர்நீதிமன்ற வளாகம், புதிய கூடுதல் சட்ட அறை, எண் 222 என்கிற முகவரியில் அலுவலகம் வைத்திருக்கும் மற்றும் சென்னை, உள்ளகரம், ராஜேஸ்வரி நகர் பிரதான சாலை, பிளாட் எண் 32 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. ரமேஷ் என்பவர் தனது 04.09.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகாரினை தெரிவித்துள்ளார்:-

> "எனது வீடு பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல அலுவலகத்திற்கு வெகு அருகாமையிலுள்ளது. கடந்த 2023ஆம் ஆண்டில் என்னுடைய வீடு அமைந்துள்ள ராஜேஸ்வரி நகர் பிரதான சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சியால் புதியதாக ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டப்பட்டது. அதேபோன்று, என்னுடைய தெருவிற்கு பக்கத்து தெருவான ராஜேஸ்வரி நகர் இரண்டாவது குறுக்கு தெருவிலும் புதியதாக ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டப்பட்டது. ஆனால் என்னுடைய தெருவான ராஜேஸ்வரி நகர் பிரதான சாலையையும், ராஜேஸ்வரி நகர் இரண்டாவது குறுக்குத் தெருவையும் இணைக்கும் பகுதியில் சுமார் 150 மீட்டர் தொலைவிற்கு புதியதாக மழைநீர் வடிகால் பெருநகர சென்னை மாநகராட்சியால் கட்டப்படவில்லை. இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்கக்கோரி பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் மூலம் கடந்த

27.02.2024, 23.06.2024, 10.07.2024 ஆகிய தேதிகளில் நான் புகார் அளித்துள்ளேன். புகார்களின் எண்கள் 2024–432QJE, 2024–642JLP, 2024–343LJA ஆகும். என் புகார்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்த பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டலத்தைச் சேர்ந்த A.E. Ward 186 அவர்கள் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும், என்னுடைய தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால் வாட்டம் பார்த்து முறையாக அமைக்கப்படவில்லை. இதனால் மழை காலங்களில் மழைநீர் வடிகால் வழியாக வடியாமல் தெருவில் பெருமளவில் தேங்கி பொது மக்களுக்கு மிகுந்த இன்னலை ஏற்படுத்துகிறது. இதில் ஊழல் நடைபெற்று இருக்கலாம் என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது. மேலும், என்னுடைய தெருவையும், இராஜேஸ்வரி நகர் இரண்டாவது குறுக்கு தெருவையும் இணைக்கும் பகுதியில் சுமார் 150 மீட்டர் தூரத்திற்கு புதியதாக மழைநீர் வடிகால் கட்டப்படாமல் விடுபட்டது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி வார்டு 186 A.E. அவர்களிடம் நான் கேட்ட போது "பிளானில் விடுபட்டுள்ளது; அதற்கு நான் பொறுப்பாக முடியாது. பெருநகர சென்னை மாநகராட்சி சேமிப்பு நிதியிலிருந்து தான் விடுபட்ட பகுதிக்கு மழைநீர் கால்வாய் புதியதாக அமைத்து தர வேண்டும்; ஆனால் தற்போது நிதியில்லாத காரணத்தால் எப்போது விடுபட்ட பகுதிக்கு மழைநீர் வடிகால் கட்டி தரப்படும் என்பதை சொல்ல இயலாது." என பதில் தெரிவித்தார். மேற்படி விடுபட்ட மழைநீர் வடிகால் பகுதியை நான் கடந்த 03.09.2024 அன்று Google GPS கேமரா மூலம் புகைப்படம் எடுத்து இந்த புகாருடன் இணைத்துள்ளேன். மேலும், என்னுடைய தெருவில் கடந்த ஐந்து ஆண்டுகளாக புதிதாக தார் சாலை பெருநகரர சென்னை மாநகராட்சியால் அமைத்து தரப்படவில்லை. அதேபோன்று பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல அலுவலகம் அமைந்துள்ள புழுதிவாக்கம் பிரதான சாலை போக்குவரத்துக்கு லாயக்கற்று குண்டும் குழியுமாக உள்ளது. என்னுடைய தெருவிலும் மேற்படி புழுதிவாக்கம் பிரதான சாலையிலும் புதியதாக சாலை அமைத்து தரக் கோரி பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் வழியாக கடந்த 25.02.2024, 01.03.2024 ஆகிய தேதிகளில் நான் புகார் அளித்துள்ளேன். அதன் எண்கள் 2024–326SFC, 2024–278BAG, 2024–150LKJ ஆகும். என்னுடைய மேற்படி புகார்களின் அடிப்படையில் புதிய தார் சாலை அமைத்து தருவதாக சொன்ன வார்டு 186 AE இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் நான் உட்பட பொது மககள் அனைவரும் போக்குவரத்து லாயக்கற்ற சாலையை கட்டாயமாக பயன்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல அலுவலர் மற்றும் அவரின் கீழ் பணியாற்றும் வார்டு 186 AE ஆகியோர் சட்டப்படி தங்கள் கடமைகளை ஆற்றாத காரணத்தால் அடிப்படை வசதிகளான சாலை மற்றும் மழைநீர் வடிகால் ஆகிய வசதிகள் முறையாக கிடைக்காமல் நான் உட்பட தெரு பொதுமக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகி தவிக்கின்றனர். எனவே, மாண்பமை உள்ளாட்சிகள் முறைமன்ற நடுவர் அவர்கள் மேற்படி நிகழ்வுகளின் அடிப்படையில், சட்டப்படி கடமையாற்றாமல் அடிப்படை வசதிகளான சாலை வசதி மற்றும் மழைநீர் வடிகால் வசதியை ஏற்படுத்திக் கொடுக்காமல் கடமை தவறிய பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல அலுவலர் மற்றும் அவரின் கீழ் பணியாற்றும் வார்டு 186 AE ஆகியோர் மீது நான் சமர்ப்பித்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும், நான் கோரிய மேற்படி அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல அலுவலருக்கு தகுந்த உத்தரவுகளை பொதுநலன் கருதி பிறப்பிக்குமாறு பணிவன்புடன் நான் வேண்டுகிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 01.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மண்டல அலுவலர் தனது 29.04.2025 மற்றும் 03.11.2025 நாளிட்ட அறிக்கைகளில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

29.04.2025 நாளிட்ட அறிக்கை

| வ. எண் | குற்றச்சாட்டின் விவரங்கள் | குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளித்தல் |
|---|---|---|
| 1 | சில மாதங்களுக்கு முன்பு என்னுடைய தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டது. ஆனால் மழைநீர் இரும்பு வடிகட்டிகள் சில இடங்களில் அமைக்கப்படவில்லை. சில இடங்களில் இரும்பு வடிகட்டி மூடி வைக்கப்படாமல் விடுபட்டுள்ளது. மேலும் ராஜேஸ்வரி நகர் இரண்டாவது குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கப்படவில்லை. இதனால் மழைகாலத்தில் மழைநீர் வடியாது நடவடிக்கை தேவை. | இராஜேஸ்வரி நகர் பிரதான சாலையும் இராஜேஸ்வரி நகர் இரண்டாவது குறுக்கு தெருவையும், இணைக்கும் சுமார் (150 மீட்டர்) புதிய மழைநீர் கால்வாய் கட்டப்பட்டுள்ளது. மேலும் இரும்பு வடிகட்டிகளும் அமைக்கப் பட்டுள்ளது. |
| 2 | நான் வசிக்கும் ராஜேஸ்வரி நகர் பிரதான சாலையையும், ராஜேஸ்வரி நகர் இரண்டாவது குறுக்கு தெருவையும் இணைக்கும் பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கால்வாய் அமைக்கப்படாமல் விடுபட்டுள்ளது. மழைகாலம் துவங்குவதற்கு முன் பணிகள் முடிக்கப்பட வேண்டும். இல்லையேல் தெருவில் மழைநீர் வெள்ளம் ஏற்படும் உடனடி நடவடிக்கை தேவை. | இராஜேஸ்வரி நகர் பிரதான சாலையும் இராஜேஸ்வரி நகர் இரண்டாவது குறுக்கு தெருவையும், இணைக்கும் சுமார் (150 மீட்டர்) புதிய மழைநீர் கால்வாய் கட்டப்பட்டுள்ளது. |
| 3 | ராஜேஸ்வரி நகர் இரண்டாவது குறுக்கு தெருவில் விடுபட்டுள்ள மழைநீர் வடிகால் பணிகள் துவக்கப்படாமல் உள்ளது. மழை காலத்தில் தெருவில் வெள்ளம் வந்தால் உதவி பொறியாளர் வார்டு 186 அவர்களே முழு பொறுப்பு. மழைகாலத்திற்கு முன்பணிகள் முடிக்கப்பட வேண்டும். மேலும் என்வீட்டின் எதிரேயுள்ள ஒரு இடத்தில் மழைநீர் வடிகட்டி அமைக்கப்படாமல் உள்ளது. சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை தேவை. தவறும்பட்சத்தில் இதுகுறித்து நான் உள்ளாட்சி முறை மன்ற நடுவரிடம் புகார் செய்ய நேரிடும். | இராஜேஸ்வரி நகர் பிரதான சாலையும் இராஜேஸ்வரி நகர் இரண்டாவது குறுக்கு தெருவையும், இணைக்கும் சுமார் (150 மீட்டர்) புதிய மழைநீர் கால்வாய் கட்டப்பட்டுள்ளது. மேலும் மழைநீர் வடிகட்டியும் அமைக்கப் பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. |

03.11.2025 நாளிட்ட அறிக்கை

மனுதாரர் குறிப்பிட்டுள்ள இராஜேஸ்வரி நகர் பகுதியில் மனுதாரர் குறிப்பிட்டவாறு இராஜேஸ்வரி நகர் பிரதான சாலையும் இரண்டாவது குறுக்கு சாலையும் இணைக்கும் இடத்தில் புதிய மழைநீர் கால்வாய் அமைக்கப்பட்டது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் மனுதாரர் குறிப்பிட்ட இராஜேஸ்வரி நகரில் புதிய சாலை அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெற்று வரும் 11.11.2025 அன்று ஒப்பம் கோரப்பட உள்ளது. எனவே 10.02.2026–க்குள் புதிய சாலை அமைக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மேற்கண்ட விளக்கத்தினை ஏற்று இம்மனுவினை இரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 04.11.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் தனது 02.11.2025 நாளிட்ட email–லில் உயர்நீதி மன்றத்தில் தான் ஆஜராக வேண்டியுள்ளதால், 04.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு வர இயலவில்லை எனவும், தனது மனுவில் கண்டுள்ள புகார்களின் அடிப்படையில் தீர்வு காணுமாறும் கோரியுள்ளார்.

6. சென்னை பெருநகர மாநகராட்சி மண்டல 14–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோர் 04.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

"1) இராஜேஸ்வரி நகர் பிரதான சாலையும் இராஜேஸ்வரி நகர் இரண்டாவது குறுக்கு தெருவையும், இணைக்கும் சுமார் (150 மீட்டர்) புதிய மழைநீர் கால்வாய் கட்டப்பட்டுள்ளது. மேலும், இரும்பு வடிகட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளது என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.''

2) இராஜேஸ்வரி நகரில் புதிய சாலை அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெற்று வரும் 11.11.2025 அன்று ஒப்புதல் கோரப்பட உள்ளது. 10.02.2026க்குள் புதிய சாலை அமைக்கப்படும் என இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.''.

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் கடந்த 2023ஆம் ஆண்டில் தன்னுடைய வீடு அமைந்துள்ள சென்னை, உள்ளகரம் ராஜேஸ்வரி நகர் பிரதான சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சியால் புதியதாக ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டப்பட்டது போன்று, தன்னுடைய தெருவான ராஜேஸ்வரி நகர் பிரதான சாலையையும், ராஜேஸ்வரி நகர் இரண்டாவது குறுக்குத் தெருவையும் இணைக்கும் பகுதியில் சுமார் 150 மீட்டர் தொலைவிற்கு புதியதாக மழைநீர் வடிகால் பெருநகர சென்னை மாநகராட்சியால் கட்டப்பட வேண்டும் என்பதும், மேலும், கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால் வாட்டம் பார்த்து முறையாக அமைக்கப்படாததால், மழைக் காலங்களில் மழைநீர் வடிகால் வழியாக வடியாமல் தெருவில் பெருமளவில் தேங்கி மிகுந்த இன்னலை ஏற்படுத்துகிறது என்பதும், இதுகுறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–க்கு மனுக்கள் அளித்தும் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும், இவ்வாறு அடிப்படை வசதிகளான சாலை மற்றும் மழைநீர் வடிகால் ஆகிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமல் கடமை தவறிய பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும், மனுதாரர் கோரிய மேற்படி அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல அலுவலருக்கு தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

இராஜேஸ்வரி நகர் பிரதான சாலையும் இராஜேஸ்வரி நகர் இரண்டாவது குறுக்கு தெருவையும், இணைக்கும் சுமார் (150 மீட்டர்) புதிய மழைநீர் வடிகால் கட்டப்பட்டு, இரும்பு வடிகட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், இராஜேஸ்வரி நகரில் புதிய சாலை அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெற்று வரும் 11.11.2025 அன்று ஒப்புதல் கோரப்பட உள்ளது என்பதும், 10.02.2026க்குள் புதிய சாலை அமைக்கப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மண்டல அலுவலரின் அறிக்கைகள் மற்றும் உதவி செயற்பொறியாளர், இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் கோரியவாறு, இராஜேஸ்வரி நகரில் புதிய சாலை அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெற்று வரும் 11.11.2025 அன்று ஒப்புதல் பெறப்பட்டு, 10.02.2026க்குள் புதிய சாலை அமைக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் உதவி செயற்பொறியாளர், இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றில் தெரிவித்தவாறு, மேற்படி புதிய சாலை அமைக்க உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல 14–ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு.B. ரமேஷ்,
பிளாட் எண் 32, ராஜேஸ்வரி நகர் பிரதான சாலை,
உள்ளகரம், சென்னை–600 091.

(2) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 14, பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 664, புழுதிவாக்கம் பிரதான சாலை,
புழுதிவாக்கம், சென்னை 600 091.

(4) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

1/12/25

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032